2020

2020

No. of Printed Pages : **4**

21374

**4556**

*Register Number*

**இரண்டாம் ஆண்டு**

# கற்றலை எளிதாக்குதலும் மேம்படுத்துதலும்

# FACILITATING AND ENHANCING LEARNING

(Tamil Version)

கால அளவு : 3 மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிகோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - I

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒவ்வொன்றிற்கும் 100** வார்த்தைகளுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **15x2=30**

1. கல்வியில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பங்களின் பெயர்களை எழுதுக.

2. சமூக அறிவியல் பாடத்தில் ஒளிபுகும் தாள்களை எம்முறைகளில் பயன்படுத்தலாம் ?

3. ஒரு மாணவன் 33% பள்ளியிலும், 17% பயணத்திலும், 5% பொழுதுபோக்கிற்கும், 45% வீட்டிலும் செலவு செய்கிறான். இத்தகவல்களைக் கொண்டு வட்ட வரைபடம் வரைக.

4. மென்பொருள் நுட்பவியல் என்றால் என்ன ?

[ Turn over

5. ஆசிரியர் மாணவர்களுக்கு எவ்வாறெல்லாம் நம்பிக்கையை ஏற்படுத்த முடியும் ?

6. ஐக்கிய நாடுகள் சபை கூறும் குழந்தை உரிமைக்கான உடன்படிக்கையின் அம்சங்களைக் கூறுக.

7. இணைக்கப்பட்ட வகுப்பு எவ்வாறு அமைய வேண்டும் ?

8. பல்வகுப்பு கற்பித்தலுக்கு எவ்வாறு தொண்டு நிறுவன உதவிகளைப் பயன்படுத்தலாம் ?

9. மனப்பான்மையின் பண்புகளை கூறுக.

10. மாணவர்களின் மனவெழுச்சிகளை நெறிப்படுத்துதல் மற்றும் முன்னேற்றத்திற்கு வழிவகுப்பவை யாவை ?

11. பண்பு வகை சார்ந்த மதிப்பீடு மூன்று நிலைகளில் மதிப்பீடு செய்யப்படுகிறது. அவை யாவை ?

12. மாணவர்கள் திறன்களை அடைவதற்கான செயல்கள் யாவை ?

13. தேர்வின் வகைகள் யாவை ?

14. கற்றலில் இயலாமையின் வகைகள் யாவை ?

15. டிஸ்கிராஃபியா – சொல் விளக்கம் தருக.

## பகுதி - II

**எவையேனும் பத்து** வினாக்களுக்கு **ஒவ்வொன்றிற்கும்** **200** வார்த்தைகளுக்கு **மிகாமல்** விடையளிக்கவும்.

**10x4=40**

**16.** கணித வகுப்பறையில் பயன்படுத்தும் கருவிகளின் முழு பயன்பாட்டினை பெற தேவையான படி நிலைகளை விளக்குக.

**17.** கண்ணாடி துண்டுகளை வைத்து நழுவங்கள் தயாரிக்கும் முறைகள் எவையேனும் இரண்டினை எழுதுக.

**18.** சாலை போக்குவரத்து என்ற பாடத்திற்கு எம்மாதிரியான கற்றல் பொருள்கள் தயாரிப்பாய் ?

**19.** பல் வகுப்புச் சூழலில் ஆசிரியரின் பன்முகப் பணிகள் யாவை ?

**20.** ஒரு ஆசிரியராக உன்னுடைய மாணவர்களுக்கு உடன்பாட்டு மனப்பான்மையை மேம்படுத்த கையாளும் உத்திகள் யாவை ?

**21.** 5 புள்ளிகள் கொண்ட தர அளவு கோலால் அளத்தல் முறைக்கு இரு எடுத்துக்காட்டு தருக.

**22.** மாணவர்களின் பன்முக வளர்ச்சிக்கு எவ்வாறான மாணவர் – ஆசிரியர் உறவு தேவை ?

**23.** குழந்தைகள் உரிமை பாதுகாப்பு பற்றி விளக்குக.

**24.** செய்முறைத் தேர்விற்கான மதிப்பீட்டுச் செயல்களை அமைக்கும் போது கவனத்தில் கொள்ளவேண்டியவை யாவை ?

**25.** விடைகளின் தன்மையின் அடிப்படையில் வினாவின் வகைகளை விளக்குக.

**26.** மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் கல்வியில் ஆசிரியரின் பங்கினை விவரி.

**27.** உடலியக்கக் குறைபாடுகளைக் களைய ஆசிரியர்கள் கையாள வேண்டிய அணுகுமுறைகள் யாவை ?

## பகுதி - III

கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிக்கவும். **ஒவ்வொன்றிற்கும் 500** வார்த்தைகளுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **3x10=30**

**28.** (அ) 5 ஆம் வகுப்பில் ஏதேனும் இரண்டு பாடபொருளுக்கு கிளை விளக்கப்படம் மற்றும் தொடர் விளக்கப்படம் வரைந்து அதை எவ்வாறு வகுப்பில் பயன்படுத்துவாய் என விளக்குக.

**அல்லது**

(ஆ) குழந்தைகளின் அடிப்படை உரிமைகளை விரிவாக விளக்குக.

**29.** (அ) பல்வகுப்பு கற்றலின் குழுத்தலைவனின் பணிகளை பட்டியலிடுக.

**அல்லது**

(ஆ) விழுமங்களில் வகுப்பறையில் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் முறைகள் பற்றி விளக்குக.

**30.** (அ) அளிப்பு வகை வினாக்களை எடுத்துக்காட்டுடன் விவரி.

**அல்லது**

(ஆ) பார்வைத்திறன் குறைபாடுடைய குழந்தைகள் வகுப்பறையில் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் யாவை ?

-oOo-